# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

மனு எண் : 0312/ஊராட்சி/2017

ஆணை எண் : 030/2017

நாள் : 17.03.2017

ஊர் பொது மக்கள், – மனுதாரர்கள்
சண்முகபுரம், கடாட்சபுரம்,
முதலூர் கிராமம், சாத்தான்குளம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.

வட்டார வளர்ச்சி அலுவலர், – எதிர் மனுதாரர்
சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம்,
தூத்துக்குடி மாவட்டம்.

**ஆணை:**

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, முதலூர் கிராம மக்கள் சார்பாக அனுப்பப்பட்ட 09.03.2017 நாளிட்ட மனுவில், தங்கள் ஊரில் செக்கடி மைதானம் என்ற விளையாட்டு மைதானம் உள்ளது என்றும், அந்த மைதானத்தில் அரசின் சார்பாக பொதுமக்களுக்கு மேல் நிலை குடிநீர் தொட்டி, நாடகமேடை மற்றும் நெற்களம் ஒன்றும் கட்டிக் கொடுத்துள்ளார்கள் என்றும் தற்போது அந்த நெற்களத்திலும் அருகிலுள்ள இடத்திலும் பக்கத்து ஊரைச் சேர்ந்த திரு. முருகன் மற்றும் நால்வர் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி விட்டார்கள் எனத் தெரிவித்து, ஊர் மக்கள் நலன் கருதி அந்த இடத்தை ஊர் பொது மக்கள் பயன்படுத்த வழிவகை செய்யுமாறு வேண்டியுள்ளார்கள்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)-ன் படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே இம் மனு மீது இம்முறை மன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—/ஒப்பம்/—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்,
**தூத்துக்குடி (இணைப்புகளுடன்)**